# 25-11-2023 செய்தி

## சர்வதேச சர்க்கரை அமைப்பை வழிநடத்தும் இந்தியா

**பற்றி:**

- லண்டனை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் சர்வதேச சர்க்கரை அமைப்பின் 2024ம் ஆண்டிற்கான தலைவராக இந்தியா தேர்வு செய்யப்பட்டுள்ளது.

**நோக்கம்:**

- கரும்பு சாகுபடி, சர்க்கரை, எத்தனால் உற்பத்தி மற்றும் உபபொருட்களின் சிறந்த பயன்பாடு ஆகியவற்றில் மிகவும் நிலையான நடைமுறைகளைப் பின்பற்றுவதில் அனைத்து உறுப்பு நாடுகளையும் ஒருங்கிணைப்பதில் இந்தியா கவனம் செலுத்த விரும்புகிறது.

**இந்தியாவின் நிலை:**

- உலகிலேயே சர்க்கரை உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.
- உலகளாவிய சர்க்கரை நுகர்வில் சுமார் 15 சதவீதத்தையும் உலகளாவிய சர்க்கரை உற்பத்தியில் சுமார் 20சதவீதத்தையும் இந்தியா கொண்டுள்ளது.
- அமெரிக்கா மற்றும் பிரேசிலுக்குப் பிறகு எத்தனால் உற்பத்தியில் உலகின் 3-வது பெரிய நாடாக உள்ளது.
- விவசாயிகளுக்கு அதிக கரும்பு விலையை வழங்கும் நாடு என்ற தனிச்சிறப்பு இந்தியாவிற்கு உண்டு.
- தேசிய சர்க்கரை நிறுவனம், கான்பூரில் அமைந்துள்ளது.

## மசோதாக்கள் குறித்த தீர்ப்பு

**பற்றி:**

- சரத்து 200 படி, மசோதாக்களை நிறுத்தி வைப்பதற்கு ஆளுநருக்கு அதிகாரம் உள்ளது.
- அதே நேரத்தில் அந்த மசோதாவை எந்த காரணமும் கூறாமல், எந்த நடவடிக்கையும் எடுக்காமல் நீண்ட நாட்களுக்கு நிலுவையில் வைக்க முடியாது.
- இதே சட்டப் பிரிவில் குறிப்பிட்டுள்ளபடி, நிறுத்தி வைப்பதாக முடிவு எடுத்துவிட்டால், அதை உடனடியாக சட்டசபையின் மறுபரிசீலனைக்கு திருப்பி அனுப்ப வேண்டும்.

SURESH'